[1994 மார்ச் 18

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு ஆண்டு காலமாக சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள முக்கிய சோதனைச் சாவடிகளிலும் கம்பி இல்லாத் தந்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஒரு ஆண்டு காலமாக சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கம்பி இல்லாத் தந்தி பொருத்தப்பட்டு இருப்பதாகக் கூறினார்கள். அதற்காக நான் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் சில சமயங்களில் சோதனைச் சாவடியில் லாரியை நிறுத்தி அந்த அதிகாரிகள் லாரியை சோதனைச் செய்ய முயற்சிக்கும் போது சில லாரிகள் அங்கே நிற்காமல் தப்பிச் சென்று விடுகின்றன. அப்படி தப்பிச் சென்று விடுவதன் காரணமாக அந்த லாரிகளில் என்ன பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றன, அந்தப் பொருட்கள் கொண்டு செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டு பிடிக்க முடியாமல் போய் விடுகின்றன. மேலும் ஒரு மாவட்ட எல்லையிலிருந்து அடுத்த மாவட்ட எல்லைக்கு அந்த லாரி கடந்து தப்பிச் செல்கின்ற நேரத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டு அந்த லாரிகளைப் பிடிக்க முடியாமல் அந்த மாவட்டத் தலைநகருக்குத் தெரிவித்து அதன் பிறகு அடுத்த மாவட்ட தலைநகருக்குத் தெரிவித்து அதன் பிறகு எங்கே லாரி செல்கிறதோ அந்த இடங்களுக்கு தகவல் தெரிவித்து இதன் மூலம் கால தாமதம் ஏற்பட்டு அந்த லாரி தப்பிச் செல்வதற்கு வழி ஏற்படுகிறது. இது போன்ற நிகழ்ச்சி ஏற்படாமல் இருக்க தமிழகத்தின் பிற பகுதிகளில் மிகவும் முக்கியமான சோதனைச் சாவடிகளில் நேரடியாகத் தொடர்பு கொண்டு அதாவது கம்பி இல்லாத்தந்திகள் அமைப்பதன் மூலம் நேரடியாகத் தொடர்பு கொண்டு அந்த தப்பிச் செல்கின்ற லாரிகளைப் பிடிப்பதற்கு வழி வகை செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லிய விவரங்களை இந்த அரசு ஏற்கனவே தெரிந்து வைத்து இருக்கின்ற காரணத்தால்தான் பரிட்சார்த்தமாக கடந்த ஆண்டு தமிழகத்தின் வணிக வரி சோதனைச் சாவடிகளில் கம்பி இல்லாத் தந்தி முறையை பயன்படுத்தி வரி ஏய்க்கின்ற விதத்தில் வாகன ஓட்டுநர்கள் செயல்படுவதை தடுத்து நிறுத்துவதற்கு கம்பி இல்லாத் தந்தி முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக கடந்த ஆண்டு நமது சென்னையைச் சுற்றியுள்ள மிகப்பெரிய

1994 மார்ச் 18]

சோதனைச் சாவடிகள் ஆகிய பூவிருந்தவல்லி, புழல், இரும்புலியூர் மற்றும் ஆவடி ஆகிய 4 சோதனைச் சாவடிகளில் கம்பி இல்லாத் தந்தி முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல் சென்னையிலுள்ள 4 உயர் அலுவலர்களுக்கும், 7 ரோந்து பிரிவுகளுக்கும் கம்பி இல்லாத் தந்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனுடைய பயன்பாடு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. பயன்பாட்டினுடைய முன்னேற்றத்தின் அடிப்படையிலேயும், நிதி நிலைமைக்கு ஏற்பவும் தமிழகம் முழுவதும் விஸ்தரிக்க அரசு கருதியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.50

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரி போக்குவரத்துக்களை மிகத் தீவிரமாகக் கண்காணிப்பதற்காக பறக்கும் படை அதிகாரிகளுடைய எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பறக்கும் படை இப்பொழுதைக்கு போதுமான அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைச் சாவடிகளில் நிற்காமல் செல்லும் வாகனங்களைப் பிடித்து எடுத்த நடவடிக்கைகள் யாவை? 1992-93 ஆம் ஆண்டிலே எவ்வளவு வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைச் சாவடிகளில் நிற்காமல் செல்லும் வாகனங்கள் மட்டுமல்லாது, சோதனைச் சாவடிகளுக்கு வராமல் மாற்று வழிகளில் தப்பித்துச் செல்கின்ற வாகனங்களையும் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதற்காகத்தான் கம்பி இல்லாத் தந்தி முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் அன்றாட நடவடிக்கைகளில் எத்தனை லாரிகள் நிறுத்தப்பட்டன என்ற புள்ளி விவரம் இல்லை என்று சொன்னாலும் நாம் இந்த முறையைக் கையாண்ட பிற்பாடு இந்தச் சோதனைச் சாவடிகளின் மூலம் வந்த வரவில் ஏறக்குறைய பத்து சதவீதம் இந்த முறையைக் கையாளுவதால் நமக்கு வருமானம் வருகின்றது என்ற தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குற்றந்த

பட்சம் இந்த ஒரு ஆண்டில் இந்த கம்பி இல்லாத் தந்தி முறை பயன்படுத்தப்படுவதால் 55 இலட்சம் ரூபாய் கூடுதல் வருமானம் கிடைத்து இருப்பதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைச்சாவடிகளில் நிற்காமல் செல்கின்ற வாகனங்கள் எந்தெந்த ஏரியாக்கள், அதாவது சென்ஸிட்டிவ் பாயின்ட் என்று சொல்லக்கூடிய ஏரியாக்கள் எந்தெந்த இடங்கள் என்பதையும் அந்த இடங்களை ஆராய்ந்து அந்த இடங்களிலும், அதாவது என்ட்ரி பாயிண்ட், எக்ஸிட் பாயிண்ட் என்று சொல்லக்கூடிய, அண்டை மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய பாதைகள், வழிகள், தடங்கள் போன்றவைகளில் புது வகையான நவீன முறையில் சோதனைச் சாவடிகளில் வாகனங்களைத் தடுப்பதற்கும், நிறுத்துவதற்கும் சோதனை செய்வதற்கும் உண்டான ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து இருக்கிறாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தச் சோதனைச் சாவடி என்ற நிலை இல்லாத வகையில் வரி ஏய்ப்பு செய்ய திட்டமிட்டு செயல்படுபவர்கள் எல்லா இடங்களிலும் தப்பிக்கின்ற முயற்சியில் ஈடுபடுகின்றார்கள். தமிழகத்தில் மொத்தம் 50 சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. 50 சோதனைச் சாவடிகளிலும் அலுவலர்களை முடுக்கிவிட்டு வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு மும்முரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிலில் வரி ஏய்ப்பு முழுமையாக நடைபெற்று வந்தது. அதனைக் கண்டறிந்து கடந்த 2 மாதங்களாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் புதிதாக திடீரென்று 5 தற்காலிகச் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தி தடுப்பு நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். அதில் நல்ல வருவாய் கிடைத்து இருக்கிறது. அதிலிருந்து தப்பிப்பதற்கு உயர்நீதி மன்றத்தையும் வரி ஏய்ப்பாளர்கள் அணுகி இருக்கிறார்கள் என்ற தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 32, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

1994 மார்ச் 18]

32—

சிவகங்கை ரோமாபுரிப்பட்டியில் கிராபைட் தொழிற்சாலை தொடங்குதல்.

*10168— திரு. கே.ஆர். முருகானந்தம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகங்கையில் ரோமாபுரிப்பட்டி கிராமத்தில் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட கிராபைட் தொழிற்சாலையை விரைவில் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் ரூபாய் 27.25 கோடித்திட்டமாக சிவகங்கையில் மேம்பட்ட கிராபைட் தயாரிக்கும் தொழிற்சாலையின் நிர்மானப் பணிகள் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தற்போது நிர்மானப் பணிகள் அனைத்தும் முடிந்து இம்மாத இறுதியில் சோதனை ஓட்டம் செய்யப்பட இருக்கிறது. வணிக ரீதியிலான கிராபைட் உற்பத்தி வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் துவங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சிவகங்கையிலே கிராபைட் தொழிற்சாலையை 1994 ஏப்ரலிலே தொடங்கும் என்ற நல்ல செய்தியை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிவகங்கையிலே தொடங்கி இருக்கின்ற சோதனை ஓட்ட தொழிற்சாலைக்கு பின்னால் அங்கே கிடைக்கின்ற சுத்திகரிக்கப்பட்ட அந்த மூலப் பொருட்களைக் கொண்டு அந்தப் பகுதியிலேயே தொழில் முனைவோர்கள் உபதொழில் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.